# இரண்டு வயது சிறுமி நிலத்தில் அடித்துக் கொல்லப்பட்டார்?

Registered as a "Newspaper" in Ceylon ** விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49 மலர் 10
போன்: 389 இதழ் 255
National Tamil Daily தேசிய தினசரி

பிரமாதி ஐப்பசி 8 வியாழக்கிழமை (24-10-68)

## 21 பேர் கைது

கொழும்பு, புதன்
பொகவந்தலாவை செல்லிஜபன் தோட்டத்தில் இரண்டு வயது நிரம்பிய சிறுமி நிலத்தில் அடித்துக் கொல்லப்பட்டாராம்.

இத்தோட்டத்தில் இரு தொழிலாளர் சங்கங்களுக்கிடையே ஏற்பட்ட மோதலின் விளைவே இப்பச்சிளங் குழந்தையின் பரிதாப முடிவுக்குக் காரணம் எனத் தெரியவருகிறது.

சரஸ்வதி என்ற இச் சிறுமி ஆயுதமான நிலையில்

(8-ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவுக்கு 29 தங்க பதக்கங்கள்

மெக்ஸிக்கோ, ஒக் 23

மெக்ஸிக்கோவில் நடந்த 10 நாட்களாக நடைபெற்று வரும் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் அமெரிக்கா இதுவரை 29 தங்கப் பதக்கங்களைப் பெற்று முன்னணியில் நிற்கிறது.

# 13 வட்டாரங்களில் 10 பேர் போட்டியின்றி தெரிவு

## அராலி கிராமசபையின் முதலாவது தேர்தல்

(சுழிபுரம் நிருபர் க. வாமதேவன்)

புதிய அராலி கிராமசபைக்கான நியமனப்பத்திரம் நேற்றுக்காலை தேர்தல் அதிகாரி திரு. ஆர் சுந்தரலிங்கம்பால்வட்டுக்கோட்டை கிராமசபை மண்டபத்தில் வைத்து ஏற்றுக்கொள்ளப்பட்டபோது பதின்மூன்று வட்டாரங்களைக் கொண்ட கிராமசபையின் பத்துவட்டாரங்களுக்கு அங்கத்தவர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்கள்.

4-ம், 7-ம், 8-ம் வட்டாரங்களுக்கே போட்டிகள் ஏற்பட்டுள்ளன.

4-ம் வட்டாரத்தில் திரு. இ. நாகலிங்கம், திரு. வே. விநாயகமூர்த்தி, 7-ம் வட்டாரத்தில் திரு. வி. செல்லப்பா, திரு. மு. மார்க்கண்டு, 8-ம் வட்டாரத்தில் திரு. பொ. நாகேந்திரம், திருவா. நடராசா ஆகியோர் போட்டியிடுகின்றார்கள்.

ஏனைய 10 வட்டாரங்களில் போட்டியின்றி அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள். விபரம் வருமாறு:-

1-ம் வட்டாரம் திரு. ஆ. சுந்தரம், 2-ம் வட்டாரம் திரு. மா. மாரிமுத்து, 3-ம் வட்டாரம் திரு. த. துரைரத்தினம், 5-ம் வட்டாரம் திரு. ஆ. நடராசா, 6-ம் வட்டாரம் திரு. க. இல்

[8-ம் பக்கம் பார்க்க]

## விஸ்வமடு விவசாய முகாம் 'ட்றக்' தடம் புரண்டது

நல்லூர், புதன்

பரந்தனிலிருந்து விஸ்வமடு விவசாயப்படை முகாமுக்கு விவசாய வீரர்களுடன் சென்று கொண்டிருந்த 'ட்றக்' வண்டி வீதியில் தடம்புரண்டதாம். இச்சம்பவம் நேற்று மாலை முரசுமோட்டைக்கு அண்மையில் நடைபெற்றுள்ளது.

இடுகு ஏற்றிக் கொண்டு விவசாயப்படை முகாமுக்குச் சென்றதாகக் கூறப்படும் இந்த 'ட்றக்'கிலிருந்த ஒருவர் அபாயகரமான நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார். கரவெட்டியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் என்பவரே படுகாயமுற்றவராவர். 'ட்றக்' சாரதியும் 'ட்றக்'கிலிருந்த மிகுதி 5 பேரும் காயம் எதுவுமின்றி பிழைத்துவிட்டனர் எனத் தெரிகிறது. கிளிநொச்சிப் பொலிசார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

## வார்ட்டிற்கு நோயாளியை எடுத்துச்சென்ற ஊழியர் மயக்கமுற்ருர்

சுழிபுரம், புதன்

நச்சுத்திராவகம் அருந்தியதாகக் கூறப்பட்ட நோயாளி ஒருவரை வார்ட்டிற்கு தள்ளுவண்டியில் கொண்டு சென்ற ஆஸ்பத்திரி தொழிலாளி ஒருவர் திடீர் மயக்கமுற்று விழுந்த சம்பவம் நேற்று மாலை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் நடைபெற்றுள்ளது.

சுழிபுரம் கல்லவேம்படியைச் சேர்ந்த வாலிபர் ஒருவரை தள்ளுவண்டியில் ஏற்றிச் சென்று கொண்டிருக்கும்பொழுது ஆஸ்பத்திரியைச் சேர்ந்த ஊழியரான விஜயரெத்தினம் என்பவரே திடீர் மயக்கமுற்றவராவர்.

ஆஸ்பத்திரி வார்ட்டில் அனுமதிக்கப்பட்ட இவர் சிகிச்சை பெற்று வருகிருர்.

## புதிய பி. எம். ஜி.

நல்லூர், புதன்

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா அடுத்த மாதம் 2-ம் திகதி போஸ்ட்மாஸ்டர் ஜெனரலாகப் பதவி ஏற்கிருர். புதிய யாழ். அரசாங்க அதிபராக நுவரெலியாவில் இப்போது அரசாங்க அதிபராகக் கடமையாற்றும் ரு. பீட்டர்ஸ் அடுத்த மாதம் 1-ம் திகதி பொறுப்பேற்கிருர்.

## மாவை ஆலய பிரவேசம்

## பிரதமருடன் பிரதம நிர்வாகி, சுந்தரலிங்கம் பேசுவர்

அளவெட்டி, புதன்

மாவை கந்தன் ஆலயத்தில் நேற்று பக்தர்கள் வெளியே நின்று வழிபாடு செய்தனர்.

கந்தசஷ்டி விழா நேற்று மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலில் நடந்தது. உள்ளே யாரும் செல்லாத வண்ணம் கோயிலில் இரும்புக் கேற்றுகள் போடப்பட்டிருந்தன.

ஆலயப் பிரவேசம் சம்பந்தமாகப் பிரதமர் டட்லி சேனநாயகாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக வவுனியா முன்னாள் எம். பி. திரு. சி. சுந்தரலிங்கமும், மாவைக் கந்தன் ஆலயப் பிரதம நிர்வாகி பிரம்மஸ்ரீ துரைசாமிக்குருக்களும் கொழும்பு சென்றுள்ளனர்.

---

## தேசியமய சேவை அமைச்சர் மீது தெகியோவிட்ட எம். பி. குற்றச்சாட்டு

(கொழும்பு நிருபர்)

**அமைச்சர் பதவியை சொந்த நலனுக்கு பயன்படுத்திருராம் தேசியமய சேவைகள் அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாஸ, தெஹியோவிட்ட எம். பி. இப்படி குற்றஞ்சாட்டியுள்ளார். இதுகுறித்து விசாரிக்க தெரிவுக்குழுவொன்றை நியமிக்கும்படியும் அவர் சபாநாயகரைக் கேட்டிருக்கிருர்.**

தேசியமய சேவைகள் அமைச்சர் திரு. வி.ஏ. சுகததாசா தமது அமைச்சர் பதவியை சொந்த நலனுக்காக துர்ப்பிரயோகம்செய்திருக்கிருரென்றும், அது சம்பந்தமாக விசாரணை செய்வதற்குத் தெரிவுக்குழுவொன்றை நியமிக்கவேண்டுமென்றும் லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த தெஹியோவத்தை எம். பி. திரு. பி. பி. ஆர். வீரசேகரா கோரியிருக்கிருர்.

சபாநாயகரிடம் விடுக்கப்பட்டுள்ள இந்தக் கோரிக்கை ஆட்சிமன்றக் குறிப் பேட்டில் வெளியாகியுள்ளது.

அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாசா துர்ப்பிரயோகம் செய்ததாகக் கூறும் 4 விவகாரங்களை திரு. டி. பி.ஆர். வீரசேகரா சுட்டிக்காட்டியுள்ளார்.

அவை வருமாறு:-

O கொழும்பில் 36, மாயர் வீதியில் காணியொன்றை 1 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய்க்கு அமைச்சர் திரு. சுகததாசா வாங்கி அதனைக் கொழும்பு மாநகரசபைக்கு 7 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய்க்கு விற்றுள்ளார்.

O கொட்டாஞ்சேனை ஜம்பட்டா தெருவில் 90 ஆயிரம் ரூபாய்க்கு ... வாங்கி அதனை ... வைப்புப் பகுதிக்கு 2 லட்சத்து 51 ஆயிரத்து 66 சதத்துக்கு விற்றுள்ளார்.

O கொழும்பு புளூமெண்டல் வீதியில் திரு. சுகததாசா தனது மைத்துனர் பெயரில் ஒரு தோட்டத்தை வாங்கி இப்போது அதனை கிழக்கிலங்கை பேப்பர் கூட்டுத்தாபனத்தின் பாவனைக்கு கொடுத்துள்ளார்.

O கொழும்பு 79, ஜம்பட்டா தெருவில் ஒரு தோட்டத்தை வாங்கி அங்கு இருந்தவர்களை வெளியேற்றி ... அமர்த்திவிட்டு குறிப்பிட்ட தோட்டத்திலிருந்து ... இழக்கிலங்கை ... கொடுத்துள்ளார்.

## எதிர்க்கட்சியினரின் அவநம்பிக்கை

கொழும்பு, புதன்

தபால் தந்தி அமைச்சர் மேஜர் மொண்டேகு ஜயவிக்கிரம மீது எதிர்க்கட்சியினர் நம்பிக்கையில்லாத் தீர்மான முன்னறிவித்தல் கொடுத்திருக்கிருர்கள்.

தபால் தந்தி பகுதி புதிய நியமனங்களில் இவர் தன்னிச்சையாக நடந்துகொண்டாரென எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## தீபாவளிக்கு உதவிய அதிபர்

சுழிபுரம், புதன்

தீபாவளி கொண்டாட்டத்துக்கு ஆசிரியர்கள் பணம் இடைக்கவில்லையே என்று ஏங்கிக்கொண்டிருந்தவேளையில் கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையைச் சேர்ந்த ஐம்பது ஆசிரியர்களுக்கு மேற்படி கலாசாலை அதிபர் திரு. எஸ். சிவலிங்கம் தமது சொந்த முயற்சியால் ரூபா 15,000 வை முற்பணமாகக் கொடுத்துதவினுராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாதார இலாகா விளக்குகிறது:

# குழந்தைகள் வயிற்ளேட்ட நோயை தடுப்பதற்கு வழிகள் என்ன?

யாழ்ப்பாணம், வியாழன் வடபகுதியில் குழந்தைகள் மத்தியில் பரவிவரும் "ஜிகல்லா" என்ற வயிற்றோட்ட நோய் உண்டாவதற்கான அறிகுறிகள் காணப்பட்டால் அவர்களை வீட்டில் ஒரு அறையில் மற்றைய குழந்தைகளுடன் தொடர்பில்லாத வகையில் தனியே வைப்பதுடன், உடனடியாக அப்பகுதி வைத்தியதிகாரிகளோ, பொது சுகாதார பரிசோதகருக்கோ அறிவிக்க வேண்டும்.

இவ்வாறு குழந்தைகள் வயிற்றோட்ட நோய்சம்பந்தமாக யாழ்ப்பாணம் சுகாதார கல்விப்பகுதியினர் வெளியிட்டுள்ள பிரசுரம் ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

இந் நோயைத் தடுப்பது சம்பந்தமாக இப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

## கொதிதண்ணீரில் அவிக்கவேண்டும்

நோயுள்ள குழந்தையின் துணிகளையும், பாவித்த உபகரணங்களையும், மற்றும் பொருட்களையும், ஊற்றைச் சோடாவில் முப்பது நிமிடங்களுக்கு நன்றாக நனைத்து வைத்து பின்னர் கொதி தண்ணீரில் அவித்துக் கழுவுதல் வேண்டும்.

இந் நோயால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளுடன் மற்றும் குழந்தைகள் கூடி விளையாடுவதையோ, ஒரே படுக்கையில் நித்திரை செய்வதையோ, ஒரே பாத்திரங்களில் உபயோகிப்பதையோ முற்றாகத் தவிர்க்க வேண்டும்.

குழந்தைகளும், மற்றும் ஏனையோரும் குடிப்பதற்கும் வாய் கழுவுவதற்கும், பற்களைச் சுத்தம்செய்வதற்கும் உபயோகிக்கும் தண்ணீரை நன்றாகக் கொதிக்கவைத்து ஆறியபின் உபயோகித்தல் வேண்டும். இதனால் நுண்ணிய கிருமிகளை அழித்து ஆபத்தை நீக்கிக் கொள்ளலாம்.

## நன்றாக கழுவுதல் வேண்டும்

குழந்தைகளுக்கான உணவைச் சமைப்பவர்கள் தங்கள் கைகளைச் சமையல் செய்வதற்கு முன்னரும், உணவைப் பரிமாற முன்னரும் மலசலங்கழித்தபின்பும், சுத்தமாகச் சவர்க்காரம் தேய்த்துத் தண்ணீரில் கழுவுதல் வேண்டும்.

குழந்தைகளுக்கு வீட்டில் சமைத்த உணவை மாத்திரம் உண்ணக் கொடுத்தல் வேண்டும். கடைகளிலிருந்து உணவு பெற்றுக்கொடுத்தல் கூடாது. உணவை எப்பொழுதும் ஈக்கள் தீண்டாமல் மூடிவைக்க வேண்டும்.

பல மணித்தியாலங்களுக்கு முன்னாகச் சமைத்த உணவை குழந்தைகளுக்கு உண்ணக் கொடுக்கக் கூடாது.

உபயோகத்திற்குத் தண்ணீர் எடுக்கும் கிணற்றினுள் 'குளோரின்' கிருமிநாசினியைக் கலத்தல் வேண்டும். இக் கிருமிநாசினியைச் சுகாதார அதிகாரிகளிலிருந்து இலவசமாகப் பெற்று பொதுச் சுகாதார பரிசோதகரின் ஆலோசனையின்படி கலக்க வேண்டும்.

இந் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் மலத்தில், 'லைசோல்' கிருமிநாசினியைக் கலந்து, அவற்றை மலகூடத்தில் அல்லது ஆழமான ஒரு கிடங்கில் மூட வேண்டும் எல்லோரும் மலசலத்தை மலகூடத்திலேயே கழிக்க வேண்டும். [ஈ. நி]

## விசேஷ ஆணையாளரின் முயற்சி

பருத்தித்துறை, புதன்

தெல்லிப்பட்டினசபை கட்டைவேலி கிராமசபை ஆகிய பகுதிகளில் கிறுபான்மைத் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வட்டாரங்களில் சுகாதார காரணங்களுக்காக வடிகால்கள் மலசல கூடங்கள், பொது விஞ்ஞான விடங்கள் ஆகியவை அமைக்கும் முயற்சியில்மேற்படி இரு சபைகளினதும் விசேட ஆணையாளர் திரு எஸ். முருகவேள் ஈடுபட்டு வருகிறார். இம் முயற்சிக்கு ஆதரவாக இப்பகுதியிலுள்ள சில பிரமுகர்கள் பணற்திரட்டி நிலம் வாங்கும் பணியை மேற்கொள்ள விரும்புவதாகத் தெரிகிறது.

— —

## கபாலிவிநாயகர்

சுழிபுரம், புதன்

வழக்கம்பரை அம்மன் கோவில் தீர்த்த மண்டபத்தில் இம்மாதம் 29-ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் பாலத்தீவு கபாலி விநாயகர் விக்கிரகம் பொதுமக்களின் தரிசனத்துக்காக காட்சிக்கு வைக்கப்படும் எனத் தெரிகிறது.

— —

## புதிய சிகிச்சை நிலையம்

யாழ்ப்பாணம், விய.

நேற்று உடுப்பிட்டியில் ஆங்கில வைத்திய சிகிச்சை நிலையமொன்றை அரசாங்க அதிபர் திரு. வேர்னன் அபயசேகரா திறந்துவைத்தார். மானிப்பாய் கிறீன் ஆஸ்பத்திரியில் டாக்டராகக் கடமையாற்றிய டாக்டர் கே. சிவஞானம் இந்த வைத்தியசாலையில் டாக்டராகக் கடமையாற்றுவார்.

# வரி விளம்பரம்

## தேவை

நல்ல அனுபவமுள்ள மெஷின் மைண்டர் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். தமிழ்நாடு அச்சகம், யாழ்ப்பாணம். 289

கணக்கப்பிள்ளை:

வியாபார அனுபவம் வாய்ந்த கணக்கப்பிள்ளை தேவை. முன் வேலை பார்த்த இடமும் சம்பளமும் கோரவும். விளம்பர இல. 291, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 291

## விற்பனைக்கு

காணி:

உரப்புலம் ஆனைக்கோட்டைக்கு சமீபமாக நல்ல ஒப்பனையுள்ள 1 1/2 பரப்பு நற்காணி விற்பனைக்கு உண்டு. ஆகக்கூடிய விலை தருவோர் விபரங்களுக்கு தொடர்பு கொள்க. C. மணி, 218, ஆஸ்பத்திரி றோட், யாழ்ப்பாணம். 290

காணி:

1. கல்வெட்டித்துறை பட்டின எல்லைக்குள் கோத்திமார் ஒழுங்கையில் 23-ம் இலக்க வீடும் வளவும் உடனடியாக விற்பனைக்குண்டு. 2. நாவலடிச்சந்தியில் காங்கேசன்துறை றோட்டில் இரண்டு பரப்புக் காணியும் உடனடியாக விற்பனைக்குள்ளது. கே. பராசசிங்கம். டெம்பிள் றோட் கிழக்கு கொக்குவில். 288

## 10 லட்சம் ஏக்கர் நிலத்தில் விவசாயம்

கொழும்பு, புதன்

மகாவலி கங்கையை வடக்குக்குத் திருப்பும் வேலை பூர்த்தியாகி சில ஆண்டுகளுக்குள் 10 லட்சம் ஏக்கர் நிலம் விவசாயத்துக்குப் படுத்தப் படும். அப்பொழுது இந்நாட்டின் உணவுசப தேவை முற்றாகத் தீர்க்கப் பட்டுவிடும்.

இவ்வாறு பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்கா மாத்தளையில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் கூறினார்.

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு முன்பாக நூறு யார் தொலைவில் குழாய் நீர், டிரெஜினேஜ் மலகூடம் மின்சார வசதிகளுடன் புதிதாக கட்டப்பட்ட இரண்டு நவீன வீடுகள் வாடகைக்கு விடப்படும். விபரங்களுக்கு 46, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். தொலைபேசி 7103 287


2-வது வாரம்

கிங்ஸ்லி பிளாஸா மைலன்


வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (கட்டுநகர்)

★ எம். ஜி. ஆர். - ★ சரோஜாதேவி

அசோகன், நம்பியார், சந்திரபாபு, தங்கவேலு

இன்னும் பலர் நடித்த

ஆர். ஆர். பிக்சர்ஸ்



பறக்கும் பாவை

[ஈஸ்ட்மன் கலர்]

44-வது தினம்

லிடோ (கொழும்பு) ராஜ் (நீர்கொழும்பு)

ராஜ்கபூர் — வைஜயந்திமாலா

நடித்த

சங்கம்

(டெக்னிக்கலர்)

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 2-30, 6-30, 9-45 எம். ஜி. ஆர், ஜெயலலிதா நடித்த காவல்காரன்

ராணி [யாழ்ப்பாணம்] தினசரி 2-30, 6-30, 9-30 ஜெமினி — சரோஜாதேவி நடித்த பெண் என்றால் பெண்

இணுவில் ஸ்ரீ காலிங்கன் தினசரி 6-30, 9-30 ஜெமினி - பத்மினி நடித்த சித்தி

மானிப்பாய் வெஸ்லி சினிமா [தினசரி 6-30, 9-30 ஜெமினி, கே. ஆர். விஜயா நடித்த [illegible] ராமு

MANOHARA JAFFNA Daily at 4-45, 7&9-45p.m Clint Eastwood Marianne Koch in Fistful of Dollars [scope / color]

ஈழநாடு தினக்குறிப்பு 1969


| FEBRUARY 1969—தை கிலக | |
| --- | --- |
| 2 Sunday 20 ஞாயிறு | |
| போயாவின் பின் 1-ம் நாள் | |
| தைப்பூசம் | |
| பூரணை விரதம் | |
| காணிக்கைத் திருநாள் | |
| 3 Monday 21 திங்கள் | |
| போயாவின் பின் 2-ம் நாள் | |


அழகிய கடதாசியில் வழமைபோல் சகல விபரங்களுடனும் தயாராகிக்கொண்டிருக்கிறது.

விற்பனையாளர்கள் பொதுமுகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# சந்திரனைச்சுற்றி வந்த அமெரிக்க விண்வெளி வீரர்க்குப் பாராட்டு

## அடுத்த வருடம் சந்திரனில் அமெரிக்காமனிதனை இறக்கலாம்

வாஷிங்டன், ஒக்.23

சந்திரனைச்சுற்றி கடந்த 11 நாட்களாக வலம் வந்துவிட்டு நேற்றுச் சுகமாகபூமி திரும்பியுள்ள அமெரிக்க விண்வெளி வீரர் மூவருக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸனும் மற்றும் பல நாட்டுத்தலைவர்களும் தமது பாராட்டை வெளியிட்டுள்ளனர்.

மூன்று விண்வெளி வீரர்களுடனும் நேற்றுத் திரு. ஜோன்ஸன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தமது பாராட்டைத் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்ஸனுக்கு அனுப்பிய பாராட்டுச் செய்தியொன்றில் மூன்று விண்வெளி வீரர்களினதும் சாதனை மகத்தானது என்று ஐ. நா. பொதுக் காரியதரிசி ஊதாண்ட் குறிப்பிட்டுள்ளார். விண்கலம் 'அப்பொலோ-7' ன் இந்த வெற்றிகரமான முயற்சி சந்திரனில் மனிதன் இறங்கும் நடவடிக்கையை மிக அருகில் கொண்டுவந்து விட்டதாகவும் அவர் தமது செய்தியில் தெரிவித்திருக்கிறார்.

ஐ.நா. சபையில் உள்ள அமெரிக்க தூதுக்குழுத் தலைமைப் பிரதிநிதியிடம் மற்றைய நாட்டுப் பிரதிநிதிகள்பலர் தமது பாராட்டை வெளியிட்டனர்.

அமெரிக்க விண் வெளி ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவர் "அப்பொலோ-7" விண்கலம் அதன் திட்டமிடப்பட்ட நோக்கங்களில் 101 சதவீத நிறைவேற்றியுள்ளதாகக் கருத்து வெளியிட்டுள்ளார்.

பிரிட்டிஷ் விண்வெளி ஆராய்ச்சிக் கழகமான ஜொட்ரல் வங்கியின் தலைவர் அடுத்த வருடம் அமெரிக்கா சந்திரனில் ஒரு மனிதனை இறக்கி விடலாமென்று கூடத் தெரிவித்துள்ளார்.

'அப்பொலோ-7' ஐச் சேர்ந்த மூன்று விண்வெளி வீரர் மூவரும் நேற்று பூமியை வந்தடைந்தபோது நல்ல உடல் நிலையுடன் காணப்பட்டார். ஆனாலும் உடனேயே அவர்கள் முதலாவது மருத்துவ பரிசோதனைக்காக அனுப்பப்பட்டனர்.

## பிரிட்டிஷ் பிரதமருக்கு திரு. ஸ்மித் பதில்

லண்டன், அக். 23

ரொடீஷியாப் பிரச்னையையிட்டுப் பிரிட்டன் அண்மையில் தெரிவித்திருந்த திட்டத்துக்கு ரொடீஷியாப் பிரதமர் திரு. அயான் ஸ்மித்திடமிருந்து தமக்குப் பதில் வந்திருப்பதாக பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் நேற்றுப் பார்லிமென்டில் அறிவித்தார்.

ஆனால் அப்பதிலின் விபரங்களை அவர் அறிவிக்கவில்லை.

ரொடீஷியப் பிரச்னைக்குச் சமாதானமான தீர்வு காண்பதையே பிரிட்டன் விரும்புவதாகவும் பிரதமர் திரு. வில்சன் வலியுறுத்தினார்.

## வடவியட்நாமுக்கு சீன அணு ஆயுதம்

நியூயோர்க், அக். 23

வடவியட்நாமுக்குத் தேவைப்பட்டால் அணு ஆயுதங்களை அளிக்கத் தாம் சீனா முன்வந்திருப்பதாக மலேஷியத் தூதுவர் திரு. முகம்மது யூசுப், ஐ. நா. பொதுச்சபையில் பேசுகையில் அறிவித்துள்ளார்.

அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம் பற்றி அவர் குறிப்பிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# செக். - ரஷ்ய உடன்படிக்கை

## நவசீன செய்தித்தாபனம் 'கீழ்த்தரமான பேரம்' என்கிறது

ஹொங்கொங், ஒக் 23

மாஸ்கோவுக்கும் பிராக்குக்குமிடையே அண்மையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை விஷயத்திலும் அமெரிக்காவைப்போல் செக்கோஸ்லாவாக்கியாவில் சோவியத் துருப்புக்களை என்ன வேண்டுமானாலும் செய்வதற்கு வழி அமைத்திருப்பதாக நவசீனசெய்தி ஸ்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

பீகிங் ரேடியோவினால் ஒலிபரப்பப்பட்ட இச்செய்தித்தாபன வாசகத்தின்படி செக் நாட்டில் சோவியத் துருப்புகளை நிலைநாட்டவழி வகுக்கும் இந்த உடன்படிக்கை சோவியத் செக். திரிபுவாதிகளுக் கிடையேயான கீழ்த் தரமான பேரம் என்று அது கண்டித்துள்ளது.

"சோவியத் துருப்புக்கள் செக். நாட்டைவிட்டு எப்போது வெளியேறும் என்பது இந்த உடன் படிக்கையில் குறிப்பிடப்படவில்லை. அந்த நாடு நிரந்தரமாகச் சோவியத் இராணுவ அதிகாரத்துக்குட்படுத்தப் பட்டிருப்பதே இதன் உண்மையான அர்த்தமாமாகும்." என்று நவசீன செய்தித்தாபனம் மேலும் குறிப்பிட்டிருக்கிறது.

# பாடசாலைஅபிவிருத்தியில் பழையமாணவர் பங்கு

## திரு.முருகேசம்பிள்ளை அறிவுறுத்தல்

பருத்தித்துறை, புதன்

'பாடசாலைகளை அரசாங்கம் கைபெற்றபின், பொதுமக்கள் அவற்றின் வளர்ச்சியில் அலட்சியமாக இருக்கிறார்கள். மாணவரிடையே ஒழுங்கீனம் மலிந்துகாணப்படுகிறது. இந்நிலையிலெபாடசாலைகளைப் பழைய சிறந்த நிலைக்குக்கொண்டுவருவதில் பழையமாணவருக்குமுக்கிய பெரும்பங்கு உண்டு. தென்னிலங்கையிலுள்ள அநேக பாடசாலைகளின் வளர்ச்சிக்கு அங்குள்ள பழையமாணவர் சங்கங்களே காரணமாகும்.'

இவ்வாறு யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் திரு: த. முருகேசம்பிள்ளை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நடந்த பழைய மாணவர் சங்க வருடாந்த மாநாட்டில் உரைநிகழ்த்தும்போது குறிப்பிட்டார். கல்லூரி அதிபர் திரு. எஸ். இரத்தினசபாபதி தலைமை தாங்கினார்.

புதுவருட உத்தியோகத்தராகப்பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

காவலர்: திரு எஸ். இரத்தினசபாபதி, தலைவர்: திரு. த. முருகேசம்பிள்ளை, இணைச் செயலாளர்கள்: திரு. எஸ். சோமசுந்தரம், திரு. எஸ். செல்லத்துரை, தனாதிகாரி: திரு.வி. இரசநாயகம்.

# கிரீசுக்கு மீண்டும் ஆயுதங்களை அமெரிக்கா அனுப்பவிருக்கிறது

வாஷிங்டன், ஒக்.23

கிரீசுக்கு மீண்டும் கனரக ஆயுதங்களை அனுப்புவதென்று அமெரிக்கா தீர்மானித்துள்ளதென்பதை அமெரிக்க ராஜாங்க இலாகா ஒப்புக்கொண்டுள்ளது.

கிரீசில் இராணுவ ஆட்சி ஏற்பட்ட சமயம் அங்கு ஆயுத சப்ளை செய்வதற்கு அமெரிக்கா தடைவிதித்திருந்தது. இப்போது அத்தடையை நீக்க அது முன்வந்துள்ளது.

இதற்குக் காரணம் மத்தியமேற்கு ஐரோப்பாவில் ரஷ்யா தனது இராணுவ பலத்தை அதிகரிக்க முயற்சிகள் எடுத்து வருவதேயாகும் என்றுராஜாங்க இலாகா அறிவித்துள்ளது.

இரண்டு கோர்க் கப்பல்களையும் 20 தொடக்கம் 30 வரையிலான ஜெட்போர் விமானங்களையும் அமெரிக்கா கிரீசுக்கு அனுப்பவிருக்கிறது.

வாஷிங்டனில்

# ஜோன்ஸனும் எபானும் மே. ஆசியாவை விவாதித்தனர்

வாஷிங்டன், ஒக்.23

அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்சனும், இஸ்ரேல் வெளியுறவு மந்திரி திரு. அபா எபானும் வாஷிங்டனில் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளனர்.

மேற்கு ஆசியாவில் நீண்டகால அடிப்படையில் ஒரு சமரசத் தீர்வுக்கான நடவடிக்கைகள் பற்றி இருவரும் ஆலோசித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இஸ்ரேல் அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

ஜெருசலம் ஒக்.23

ஜெருசலத்திலிருந்து கிடைக்கும் செய்திகள் இஸ்ரேல் அரசாங்கத்துக்கெதிராக இஸ்ரேல் பார்லிமென்டில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்று நேற்று அங்கு தோல்வியுற்றதாகத் தெரிவிக்கின்றன.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம், ஐ. நா. விலும் வெளியிலும் இஸ்ரேல்வெளியுறவு மந்திரி திரு. எபான் மேற்கொண்டுள்ள மேற்கு ஆசியப்பிரச்னை தீர்வுக்கான ராஜதந்திர நடவடிக்கைகளைக் கண்டித்துள்ளது.

# அமெரிக்கா-இஸ்ரேல் மீது சிரியா பலத்த கண்டனம்

நியூயோர்க், ஒக்.23

ஐ. நா. பொதுச்சபையில் சிரியாப்பிரதிநிதி, இஸ்ரேல் அரபுப் பிராந்தியங்களைத் தன்வசம் வைத்துக் கொண்டிருப்பதற்கு அமெரிக்கா உதவியளித்து வருவதாக அமெரிக்கா மீது குற்றம் சாட்டினார்.

இஸ்ரேலுக்குப்போர் விமானங்களை அமெரிக்கா உதவி வழங்க செய்யவிருக்கும் திட்டத்துக்கும் அவர் கண்டனம் தெரிவித்தார்.

மேற்கு ஆசியாத் தீர்வுக்கு அண்மையில் இஸ்ரேல் வெளியிட்ட 9 அம்சத்திட்டத்தை மிகப் பொதுவான திட்டம் என்று கூறிச் சிரியாப்பிரதிநிதி நிராகரித்துவிட்டார்.

பெரும் போருக்கு இஸ்ரேல் தன்னை தயார்செய்து வருவதாகவும் சிரியாப் பிரதிநிதி குற்றம் சாட்டினார்.

## ஆசிய - ஆபிரிக்க திரைப்பட விழா தாஷ்கெண்டில்

தாஷ்கெண்ட், அக். 23

ஆசிய - ஆபிரிக்க நாடுகளின் முதலாவது சர்வதேச திரைப்படவிழா இங்குள்ள தலை சிறந்த மண்டபமான 'கலைகள் மாளிகை'யில் நடந்த வைபவத்துடன் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. இந்த வைபவத்தில் 2500 பேர்கள் கலந்து கொண்டனர். இந்த விழாவில் 46 நாடுகளின் திரைப்படக் கர்த்தாக்கள் வந்திருக்கிறார்கள். கலைகள் மண்டபத்திற்குச் செல்லும் வழி நெடுக இந்த நாடுகளின் தேசியக் கொடிகள் பறக்கின்றன. ஐரோப்பிய, அமெரிக்க கலாமேதை விலாசங்களும் தாஷ்கெண்டிற்கு வந்துள்ளனர்.

சோவியத் அமைச்சரவைத் தலைவர் திரு. அலக்ஸி கொஸிஜினின் வாழ்த்துச்செய்தி திறப்பு விழாவில் வாசிக்கப்பட்டது.

## சாபா பிரச்னை மலேஷிய செனட் சபை தீர்மானம்

கோலாலம்பூர், அக். 23

அண்மையில் மலேஷியாவுக்கும் பிலிப்பைன்சுக்கும் தகராறுக்குள்ளான பிரதேசமான சாபா பிலிப்பைன்ஸின் ஒரு பகுதி என்று பிலிப்பைன்ஸ் பார்லிமென்ட் நிறைவேற்றின சட்டம், செல்லுபடியாகாது என்று மலேஷிய செனட் சபை நேற்று ஒரு தீர்மானத்தை இங்கு நிறைவேற்றியது.

முன்னதாக இதே தீர்மானம் மலேஷிய ஜனப் பிரதிநிதிகள் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

# பெற்றோரின் கவனக்குறைவு இளைஞரை வழிதவறச் செய்யும்

## சிறுவர் தினவிழாவில் நீதிபதியின் எச்சரிக்கை

உடுவில், புதன்

"நாட்டில் குற்றங்கள் மலிவதற்கும் அக்கிரமங்களுக்கும் இளைஞர்கள் பலியாவதற்கும் மூலகாரணமாக இருப்பது பெற்றோரின் கவனக் குறைவே. தமது பிள்ளைகளை ஒழுங்கான முறையில் கண்டித்துத் திருத்தவேண்டியது பெற்றோருடைய கடமை. அதைவிடுத்து குழந்தைகளுக்கு அளவுக்கு மிஞ்சிய செல்லம் கொடுப்பதால் குற்றங்கள் அதிகரிக்கின்றன. பிள்ளைகளின் சமூக வளர்ச்சி குன்றவும், அறிவுத்துறையில் அவர்கள் பின் நிற்கவும் பெற்றோர்களின் கவனக் குறைவே காரணம் எனலாம். எனவே குழந்தைகளை நல்ல முறையில் வளர்க்க பெற்றோர் விழிப்புடனிருக்க வேண்டும்"

இவ்வாறு மல்லாகம் நீதவான் திரு. எம். சண்முகலிங்கம் சர்வதேச சர்வதேசசிறுவர் வாரக் கொண்டாட்டங்களுக்கு தலைமைவகித்துப் பேசுகையில் கூறினார். சர்வதேச சிறுவர் வாரக் கொண்டாட்டங்கள் இளவாலை செண். ஹென்றிஸ் கல்லூரியில் நடைபெற்றன.

ஐ நா.இலங்கைக் கிளைத் தலைவர் திரு, ரி. ஸ்ரீ இராமநாதனும் பேசினார்.

சர்வதேச சிறுவர் வாரத்தையொட்டி பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற போட்டிகளின் முடிவுகள் பின்வருமாறு:—

கூட்டுப்பாட்டு

அருணோதயாக்கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, செண். ஹென்றிஸ் கல்லூரி, ஸ்கந்தவரோதயா கல்லூரி.

நடனம்

உருப்பராய் இந்துக்கல்லூரி, இளவாலை மகளிர் கல்லூரி.

தனிப்பாட்டு

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி' அருணோதயாக் கல்லூரி.

நாடகம்

இளவாலைமகளிர் கல்லூரி, கீரிமலை நகுலேஸ்வராவித்தியாசாலை, மாதகல் செண். ஜோசப் கல்லூரி.

வெற்றியீட்டிய இப்பாடசாலைப்பிள்ளைகளுக்கு திருமதி எம். சண்முகலிங்கம் பரிசில்கள் வழங்கினார்.

## "நடவடிக்கை எடுப்பேன்"

அளவெட்டி, புதன்

"ஈழம் வாழ் தமிழ் மாணவர் தமிழகத்திற்கு வந்து உபகாரச் சம்பளம் மூலம் உயர்தரக்கல்வி பயின்று நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டிய நடவடிக்கை நான் தாயகம் சென்றதும் செய்து தருவேன்" என்று தமிழக மாணவர் மன்றத் தலைவர் திரு இரா. ஜனார்த்தனம் இங்கிருந்து புறப்படுகையில் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

## 'முன்வரவேண்டும்'

இணுவில், புதன்

"பொது ஸ்தாபனங்களிலும் பொது விஷயங்களிலும் பதவிவகிக்கவும் அங்கம் வகிப்பதற்கும் ஒவ்வொருவரும் தாமாகவே முன்வரவேண்டும்." என்று இணுவில் சிவகாமிஅம்மன் சனசமூக நிலையத்தினர் நடத்திய ஓர் கூட்டத்தில் ஆசிரியர் திரு. கி. ஆனந்தராசா கூறினார்.

மேற்படி சனசமூக நிலையத்தின் முன் னாள் தலைவர் திரு. கி. பூபாலச்சந்திரன் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'இவரைப்போல் மேதாவியை காண்பதரிது'

கொழும்பு, புதன்

"ஆறுமுகநாவலருக்குப் பின்பு எமது சமூகத்திற்கு பெரிய தொண்டாற்றியவர் சேர் பொன் இராமநாதனவர். அவரைப்போல் ஒரு மேதாவியை நாம் எமது காலத்தில் காண்பது அரிது. அப்படிப்பட்ட ஒருவரின் பெயரில் கழகம் இருப்பது வரவேற்கத்தக்கது"

சேர். பொன். இராமநாதன் கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கு தலைமைதாங்கிய வழக்கறிஞர் ஏ. சி. நடராசா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் எமக்கு சுபீட்சம் ஏற்படவேண்டுமெனின், அந்த சுபீட்சம் கிராமங்களில் இருந்துதான் வரவேண்டும் என்றும், நாட்டின் உயிர் நாடி கிராமங்கள் என்றும் கூறினார்.

புதுவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. ஏ. சி. நடராசா, உப தலைவர்கள் திருவாளர்கள்; கே. ஸ்ரீ பத்மநாதன், சு. இலிங்கநாதன் பொதுச்செயலாளர் திரு. கே. எஸ். மகேசன் நிர்வாகச் செயலாளர் திரு. ம. ஆசீர்வாதம் பொருளாளர்கள் திரு. என். சின்னையா, திரு. பே. கனகலிங்கம்.

---

## 'பஸ்ஸைத் தரிப்பு நிலையத்தில் நிறுத்துக'

### வல்வை ப. சபை தீர்மானம்

புலோலி, புதன்

பருத்தித்துறையிலிருந்து வல்வெட்டித்துறை ஊடாக யாழ்ப்பாணம் செல்லும் பஸ்கள் பஸ்தரிப்பு நிலையங்களில் நிறுத்தப்படாமல் பஸ் சாரதிகள் விரும்பும் இடங்களில் நிறுத்தப்படுகிறதாம். இதனால் குறிப்பிட்ட ஒரு இடத்தில் இறங்கவேண்டிய பிரயாணிகள் அவ்விடத்தில் இறங்கமுடியாமல் அப்பால் சென்று இறங்கவேண்டி ஏற்படுகிறதாம். இதைப்பற்றிப் பல தடவைகள் இ. போ. ச. அதிகாரிகளிடம் முறையிட்டபொழுதிலும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையென பிரயாணிகள் குறைகூறுகின்றனர்.

வல்வை பட்டினசபையின் விசேஷ கூட்டத்தில் பருத்தித்துறை வீதியிலுள்ள பஸ் தரிப்பு நிலையங்களில் பஸ்களை நிறுத்தவேண்டும் என்று இ. போ. சபை பருத்தித்துறை டிப்போ முகாமையாளரைக் கேட்டுக்கொள்ளுமாறு தீர்மானமொன்று தீர்மானிக்கப்பட்டது.

---

## வயோதிபரின் பரிதாப மரணம்

அராலி, புதன்

பனங்கிழங்கு உற்பத்திக்காகப் பனம் விதைகளை வண்டியில் ஏற்றிச்சென்ற கந்தரம்பிள்ளை முத்தையாபிள்ளை [86] என்ற வயோதிபர் குளவிகொட்டி மரணமானார். வண்டிமாடுகள் விழுந்துகிடந்த சவோலை ஒன்றை மிதித்து சென்றதும் அவ்வோலையில் கூடுகட்டி இருந்த குளவிக் கூட்டம் வண்டிமாடுகளையும் முத்தையாபிள்ளையையும் கொட்டினவாம். வேதனை தாங்க முடியாதமாடுகள் வெருண்டு ஓடின. ஒரு பனைமரத்தில் மோதி வண்டிநுகத்தையும் முறித்து ஓட்டம் எடுத்தன. வண்டியை ஓட்டிச்சென்ற வயோதிபர் முத்தையாபிள்ளை ஆசனத்திலிருந்து நழுவிவிழுந்தபோது வண்டிச் சக்கரத்தில் மோதி தலையில் காயம் ஏற்பட்டு ஆஸ்பத்திரிக்கு உடன் எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சை பெறும்போது மரணமானார்.

## வீதிப் பாதுகாப்பு பற்றிய கண்காட்சி

பண்டத்தரிப்பு, புதன்

மாணவ மாணவிகளும் மற்றும் பொதுமக்களும் பாதுகாப்பான முறையில் வீதிகளை எப்படி உபயோகிக்கவேண்டும் என்பதை செய்முறை மூலம் யாழ்ப்பாணம் வீதிப் பாதுகாப்பு பொலிஸ் பகுதி, இ. போ. ச. பகுதியினர் இளவாலையில் நடைபெற்ற சிறுவர் தின விளையாட்டுப் போட்டிகளின்போது காண்பித்தனர். மாணவ மாணவிகள் தெருவைக் கடத்தல், பஸ்ஸில் ஏறுதல், சைக்கிளில் செல்லல் போன்ற பல்வேறு முறைகளும் திறம்பட விளக்கிக் காண்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் பொலிசார் இந்நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர்.

---

## மத்திய கல்லூரியில் திருக்குர்ஆன் விழா

நல்லூர், புதன்

யாழ்ப்பாண மத்திய கல்லூரி முஸ்லிம் மாணவர் மஜ்லிஸ் சார்பில் கல்லூரி மண்டபத்தில் 1400-வது திருக்குர்ஆன் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன திருக்குர்ஆன் விரிவுரையாளர் ஆலி ஜனாப் என். எம். முகமது மீரான் மௌலவி ஆலிம் குர்ஆனின் மகிமைபற்றி சிறப்புச்சொற்பொழிவு நிகழ்த்தினார். முஸ்லிம் மாணவர் மஜ்லிஸ் தலைவர் எம். சபூர்தீன் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

---

## திரும்பவும் பரிசீலனை செய்யப்படும்

வட்டுக்கோட்டை, புதன்

அராலிக் கடற்கரை யாழ்ப்பாணத்திற்கும் பண்டத்தரிப்புக்குமிடையே பாடசாலை நாட்களில் விசேட பஸ்சேவை காலையிலும் பிற்பகலிலும் நடாத்துமாறு அராலி பஸ் பிரயாணிகள் சங்கம் இ. போ. ச. பிராந்திய முகாமையாளரைக் கேட்டிருந்தது. அப்படியான ஓர் சேவையை ஒட்டுவது சபைக்கு இலாபகரமாயிராதென பிராந்திய மனேச்சர் சங்கத்தை விரித்தார். பிரயாணிகள் சங்கம் இது விடயமாக யாழ். மாவட்ட போக்குவரத்து சம்மேளனத்துடன் கடிதத் தொடர்பு கொண்டுள்ளது. மேலும் அலவன்ஸ் பஸ்சாரதிக்கும் கண்டக்டருக்கும் இத்தமார்க்கத்தில் ஓடுவதனால் கிடைக்கின்றதாம். இந்த அலவன்ஸ் தொகைக்கு தலான பிரயாணிகளை ஏற்றிச் செல்வதற்காக வழங்கப்படுகிறதாம். கூடுதலான பிரயாணிகள் பயணம் செய்யும் பஸ் மார்க்கத்தில் இலாபமேற்படாதென்ற முகாமையாளரின் பதில் திருப்தியளிப்பதாயில்லையெனவும் ஆகவே பாடசாலை பஸ் சேவைபற்றி திரும்பவும் பரிசீலனை செய்யுமாறு இ. போ. ச. யாழ் மாவட்ட பிராந்திய முகாமையாளரை தங்கள் சார்பில் கேட்குமாறு அராலி பஸ் பிரயாணிகள் சங்கம் மாவட்ட போக்குவரத்து சம்மேளனத்தை கேட்டுள்ளது.

---

## புதிய வார்ட்டில்

யாழ்ப்பாணம், வியா

நேற்றுக்காலை சுகாதார மந்திரியால் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் திறந்து வைக்கப்பட்ட 104 படுக்கைகள் கொண்ட புதிய வார்ட்டில் முதல் நோயாளியாக, சத்திர சிகிச்சை செய்வதற்காக, ஓய்வு பெற்ற சுகாதார பரிசோதகர் பி. நடராஜா என்பவர் நேற்று அனுமதிக்கப்பட்டார்.

## முதல்பரிசு பெற்ற நாடகம்

அளவெட்டி, புதன்

வேலைக்கு அமர்த்தப்படும் சிறுவர்களும், சிறுமியரும் படும் துன்பத்தை விளக்கும் நாடகம் சிறுவர் தின விழாவில் முதலிடம் பெற்றுள்ளது.

உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டுவரும் சர்வதேச சிறுவர் தினத்தை யொட்டி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் ஒழி நாடகப்போட்டி நடாத்தப்பட்டது.

10 க்கு மேற்பட்ட பலபிரபல பாடசாலைகள் கலந்துகொண்ட இந்நாடகப்போட்டியில் மேடையேற்றிய இளவாலை யிசுத்த ஹென்றிஸ் கல்லூரி முதலிடத்தைப் பெற்றது. நகுலேஸ்வரா வித்தியாலய மாணவர்களின் நாடகம் இரண்டாம் இடத்தையும் மாதகல் அர்ச். யோசப்கல்லூரி மூன்றும் இடத்தையும் பெற்றது.

---

## "மாணவர் மாற்றலாம்"

அளவெட்டி, புதன்

"தமிழகத்தில் ஆட்சி அமைப்பை மாற்றி அமைத்த பெருமை மாணவர் சமுதாயத்திற்குண்டு. அதேபோல் ஈழத்து அரசியல் அமைப்பும் மாற்றியமைக்க ஈழத்து தமிழ் மாணவ சமுதாயம் முன்வர வேண்டும்" என்று வட இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஆதரவில் தமிழ மாணவ பேரவைத் தலைவர் திரு. இரா. ஜனார்த்தனனுக்கு அளிக்கப்பட்ட தேநீர் விருந்துபசார வைபவத்தில் சங்கத் தலைவர் திரு. க. சுப்பிரமணியம் கூறினார். பலாலியில் இவ்வைபவம் நடைபெற்றது.

---

## ஓய்வுபெற்ற ஆசிரியருக்கு பிரிவுபசாரம்

சுழிபுரம், புதன்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஆசிரியராக கடந்த ஐந்து வருடங்களாக கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு. வி. தம்பு அவர்களின் சேவை நலம் பாராட்டுவைபவம் கடந்த மூன்று தினங்களாக நடைபெற்றது. பிரதம பாடசாலை தலைமையாசிரியர் திரு. நா. பொன்னையாவின் தலைமையில் பிரிவுபசாரமும், மேல்வகுப்பு மாணவர்களால் இரண்டாவது நாள் பிரிவுபசாரமும் மூன்றும் நாள் மாணவர்கள் ஒன்றுசேர்ந்து விருந்துபசாரம் பாராட்டு வைபவத்தையும் நடத்தினர்.

## ஊர்காவற்றுறை செய்திகள்

— நமது நிருபர் செ. சுப்பிரமணியம் —

# "மீன்பிடித்துறைமுகம் அமைக்குக"

## நாரந்தனை கிராமசபை தீர்மானம்

ஊர்காவற்றுறை, புதன்

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த பருத்தியடைப்பு வாருண்டியில் மீன்பிடித்துறைமுகமொன்றை அமைத்து மீனவர்களின் கஷ்டத்தைப் போக்கவேண்டுமென அரசினரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் நாரந்தனைக் கிராமசபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக யாழ்ப்பாணம் விதல ஸ்தாபன வேலை மேற்பார்வையாளர் திரு. தயாபரன் வாருண்டிக்கு விஜயம்செய்து இடத்தைப் பார்வையிட்டுச் சென்றுள்ளார்.

### கிராமசபை பாராட்டு

ஊர்காவற்றுறை, புதன்

ஊர்காவற்றுறை - கரம்பொன் கிராமத்தைச் சேர்ந்த வண. பிதா எம். ஆர். அன்ரனி யாழ்ப்பாணம் உதவி மேற்றிராணியாராகத் தெரிவு செய்யப்பட்டமையைப் பாராட்டி நாரந்தனைக்கிராமசபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

### இடமாற்றம்

ஊர்காவற்றுறை, புதன்

கண்டி மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றிய நீதிபதி திரு. ஆர். டி. சேனநாயக்கா இம்மாதம் 22-ந் திகதி தொடக்கம் ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம் மேலதிக நீதிபதியாக இடமாற்றம் பெற்றுள்ளார்.

### 1000 ரூபா அபராதம்

ஊர்காவற்றுறை, புதன்

ஊர்காவற்றுறை, மண்கும்பானைச் சேர்ந்த சுவுரும்பிள்ளை அரோக்கியம் என்பவர் சட்ட விரோதமாக 'ரிவோல்வர்' வைத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் ஊர்காவற்றுறை நீதிபதி திரு ஜமீல் எதிரிக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

---

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், வியா.

சங்கானை நூல்நிலைய ஆராய்வுக் குழுவின் ஆதரவில் இம்மாதம் 28ம் திகதி மாலை 5 மணிக்கு சங்கானை பட்டின சபை நூல் நிலைய மண்டபத்தில் வலிகாமம் மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாஜ செயலாளர் திரு. வி. கந்தசாமி "மேலை நாட்டுக்கைத்தொழில்கள்" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றுவார்.

## தமிழரசுக்கட்சி பிரசாரக் கூட்டம்

ஊர்காவற்றுறை, புதன்

தமிழரசுக்கட்சியின் பிரசாரக் கூட்டம் ஒன்றை சரவணை "நாவலர்" மைதானத்தில் நடத்துவதற்கு சரவணை தமிழரசு அபிமானிகள் ஏற்பாடு செய்துவருகின்றனர்.

---

## 'தேடுதல் இயந்திரப்படகு வேண்டும்'

காங்கேசன்துறை, புதன்

மயிலிட்டி இயந்திரப் படகுகள் இயந்திர கோளாறு காரணமாக நடுக்கடலில் தத்தளிக்கும்போது மீனவர்களை காப்பாற்றுவதற்கு ஒரு தேடுதல் இயந்திரப் படகை தந்துதவுமாறு மயிலிட்டி ஆனந்தா கூட்டுறவு மீன்பிடிச் சங்கம் கடற்றொழில் அதிபரைக் கோரியுள்ளது.

ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் அடிக்கடி நடுக்கடலில் அவதியுறுவதை தடுப்பதற்கு இது உதவுமெனவும் கூறப்பட்டுள்ளது. கைத்தொழில் மீன்பிடி அமைச்சருக்கும் மீன்பிடிக் கூட்டுஸ்தாபனத் தலைவருக்கும் இதேபோன்ற வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

---

## அபேட்சா பத்திரம் தாக்கல்

கோப்பாய், புதன்

கோப்பாய் கிராமசபைத் தேர்தலுக்கான அபேட்சகர் நியமனப் பத்திரங்கள் எதிர்வரும் நவம்பர் 5-ம் திகதி மேற்படி சபைக்காரியாலயத்தில் தாக்கல் செய்யப்படும். இம்முறை புதிய 15 வட்டாரங்களில் இத்தேர்தல் நடைபெறுமென்பது குறிப்பிடத்தக்கது.

---

## புதியதலைவர்

யாழ்ப்பாணம், வியா.

அண்மையில் நடைபெற்ற யாழ். சைவபரிபாலன சபையின் நிர்வாகசபைக் கூட்டத்தில் வழக்கறிஞர் திரு. வே. நாகலிங்கம் சபையின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

-(கே. நி)-

சிங்கம் மார்க் சந்தனத் தைலம்

...டிலே எங்குமே கிடைக்கும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இருபிரிவிலும்

# மகாஜனாவுக்கு வெற்றி

## உடுப்பிட்டி இந்துகோஷ்டிகளுடன் நடந்த விறுவிறுப்பான உதைபந்தாட்ட மோதல்

உரும்பராய், புதன்
யாழ் பாடசாலை உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் பாடசாலைகளிடையே நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டப் போட்டியில் உரும்பராய் இந்துக்கல்லூரி கோஷ்டியும் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரிக் கோஷ்டியும் நேற்று மோதிக்கொண்டன.

இரண்டாம் பிரிவு மோதலில் போட்டி ஆரம்பத்தில் இரு கோஷ்டிகளும் விட்டுக்கொடுக்காமல் விளையாடியபொழுதிலும் மகாஜனக் கல்லூரிக் கோஷ்டியே முதல் கோலைப் போட்டது. இடைவேளைக்குமுதல் மகாஜனக் கல்லூரி கோஷ்டி இரண்டு கோலைப் பெற்றிருந்தது. இடைவேளையின் பின் மகாஜனக் கோஷ்டி மிகவும் உற்சாகத்துடன் விளையாடி ஒன்றன்பின் ஒன்றாக ஆறு கோலை இந்துக்கல்லூரி கோலுக்குள் நுழைத்தது. இந்துக் கோஷ்டியினால் ஒரு கோலையே பெறமுடிந்தது. மகாஜனக் கல்லூரிக் கோஷ்டியினரின் திறமையான விளையாட்டுக்கு இந்துக்கல்லூரிக் கோஷ்டியால் ஈடுகொடுக்க முடியவில்லை.

முடிவில் மகாஜனக்கல்லூரிக் கோஷ்டி 8—1 கோலால் இந்துக் கல்லூரிக் கோஷ்டியை தோற்கடித்து வெற்றிபெற்றது.

மூன்றாம் பிரிவில் இரு கல்லூரிகளுக்குமிடையே நடைபெற்ற போட்டியில் மகாஜனக்கல்லூரி கோஷ்டி மிகவும் திறமையுடன் விளையாடி 3—0 கோலால் இந்துக்கல்லூரி கோஷ்டியை வெற்றிபெற்றது.

உரும்பராய் இந்துக்கல்லூரி விளையாட்டரங்கில் இவ்விரு போட்டிகளும் இடம்பெற்றன. இரு போட்டிகளுக்கும் திரு. ஞானப்பிரகாசம் மத்தியஸ்தம் வகித்தார்.

## இன்றைய பலன்

24-10-68

ஐப்பசி 8 உ

வியாழக்கிழமை

திதி- திருதியை இரவு 9-17 மேல் சதுர்த்தி.

நட்சத்திரம்- அனுஷம் இரவு 2-19 மேல் கேட்டை.

ராகுகாலம் - 1-32—3-02.

சுபநேரம் - 7-32 — 9-02.

இன்று பிறந்தவர்களுக்கு- இவ்வாண்டு சுமாரான காலமென்றே கூறவேண்டும். விரோதிகள் தொல்லை மிகும். எனவே கட்டுப்பாட்டுடன் செலவு செய்யவும். தொழில் துறையில் மந்த நிலையே காணப்படும். தொழிலாளர்கள் மத்தியில் குழப்பங்கள் தோன்றக்கூடும். நிதானத்தை இழக்காதிருப்பது நன்று. பொருளாதாரச் சிக்கல்களையும், தனிவழிப் பயணத்தையும் தவிர்த்துக்கொள்ளவும். உஷ்ண ரோகங்கள் தென்படா வண்ணம் பாதுகாப்பாக நடந்து கொள்ளவும். நாவடக்கம் நன்மை தரும்.

மேஷம்- துன்பத்தின் நிழலாட்டம், துயர் படிந்த நாள்.

ரிஷபம்- துளிர் விடும் வாழ்வு, ஒளிவிடும் வாழ்வு.

மிதுனம்- சிந்தையில் குழறல், செயலிலே தடுமாட்டம்.

கடகம்- தெளிந்த மனம், தெய்வத்தின் துணை.

சிம்மம்- முயற்சியில் வெற்றி, மூத்தோர் உதவி.

கன்னி- கைத்தொழில் விருத்தி, காரியஜெயம்.

துலாம்- ஏகாந்த சிந்தை, தனிவழிநாட்டம்.

விருச்சிகம்- கோபப் பார்வை, கொள்கையில் கோணல்.

தனுசு- வெள்ளிப் பணம் தன்னும், வேண்டியது கிடைக்கும்.

மகரம்- ஆசைவைக்காதே அவதிப்படாதே.

கும்பம்- நல்லமுடிவு, நன்மைகள் சேரும்.

மீனம்- சந்தான சந்திப்பு, முத்தானநிகழ்ச்சி.

— சோதிடக் கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

## வெற்றியும் தோல்வியும்

பண்டத்தரிப்பு, புதன்
சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும், இளவாலை ஹென்றிஅரசர் கல்லூரிக்குமிடையே சென்.ஜோன்ஸ் மைதானத்தில் நடைபெற்ற 1-ம் பிரிவுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி 3 கோல்களைப் போட்டு ஹென்றிஅரசர் கோஷ்டியைத் தோற்கடித்தது 2-ம் பிரிவுக்கான போட்டியில் இளவாலை ஹென்றிஅரசர் கோஷ்டி, சென்.ஜோன்ஸ் கோஷ்டியை 4-1 கோல்களால் வெற்றிபெற்றது.

## புதிய நிர்வாகிகள்

காங்கேசன்துறை, புதன்
காம்பெல் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஆ. இரத்தினசபாபதி, உபதலைவர் திரு. க. கனகசபை, காரியதரிசி திரு. வே. சோமசுந்தரம். நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

0 0 0

சுழிபுரம், புதன்
பண்ணாகம்தெற்கு ஸ்ரீமுருகன் கிராமமுன்னேற்ற சனசமூகசேவா வாலிபர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் நிலைய மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. செ. திருநாவுக்கரசுதலைமையில் நடைபெற்றது. திரு. அப்பாத்துரை கிராம முன்னேற்றத்துக்கு சங்கங்கள் ஆற்றவேண்டிய பணிகள் பற்றி சிறப்புரை நிகழ்த்தினார். புதிய உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்,

தலைவர் செ. திருநாவுக்கரசு, உபதலைவர்கள்: ம. ஆறுமுகம், இ. ஆறுமுகம், காரியதரிசி: இ. கிருஷ்ணதுரை, உபகாரியதரிசி: ஆ. குமாரகுருமூர்த்தி, தனாதிகாரி: மா. சிவரத்தினம், விளையாட்டுக் காரியதரிசி: க. துரைலிங்கம், நூல்நிலையப்பொறுப்பாளர்: பொன். குணரத்தினம், கணக்குப் பரிசோதகர்: ஐ. இராசகுரு, ச. கனகராசா. நிர்வாகசபை உறுப்பினர்களாக மூவர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## மத்திய கல்லூரி வெற்றி

சுழிபுரம், புதன்
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி முதலாவது பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி முதலாம் பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் சினேகபூர்வமாக யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் மத்தியகல்லூரி ஒருகோல் போட்டு வெற்றியடைந்தது யாழ்ப்பாணக் கல்லூரி கோல் எதுவும் போடவில்லை.

மேற்படி கல்லூரியின் இரண்டாம் பிரிவுக் கோஷ்டியினருக்கிடையே நடைபெற்ற போட்டியில் மத்திய கல்லூரியினர் மூன்று கோல்களைப் போட்டு வெற்றிபெற்றனர். வட்டுக்கோட்டை கோல் எதுவும் போடவில்லை.

## கரபந்தாட்டம்

உடுப்பிட்டி, புதன்
வதிரி சனசமூகநிலையக் கைப்பந்தாட்டக் கோஷ்டியினருக்கும், காந்தியூர் கைப்பந்தாட்டக் கழகத்தினருக்குமிடையே நடைபெற்ற கரபந்தாட்ட மோதலில் வதிரி சனசமூகநிலையக் கோஷ்டியினர் வெற்றியீட்டினர். புள்ளிவிபரம்: 15-8 15-11. திரு மு. அழகேந்திரராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## பண்டிதர் வீரகத்திக்கு தென்னகப் பரிசு

பருத்தித்துறை, புதன்
நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் பண்டிதர் திரு. க. வீரகத்தி எழுதிய "தொல்காப்பியர் இலக்கண நுண்மை" என்னும் கட்டுரையைப் பாராட்டி அதற்குப் பணப்பரிசு ஒன்று அளிக்கவிருப்பதாக தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பிரசுரச் சபை அறிவித்துள்ளது.

## முதல் ஆண்டு விழா

யாழ்ப்பாணம், வியா.
யாழ்ப்பாணம் எம். ஜி. ஆர். மன்ற முதலாவது ஆண்டு பூர்த்தி விழா இன்று நடைபெறவிருக்கிறது. இதையொட்டி நோயாளர்களுக்கு குளிர்பானம் வழங்க மன்றத்தினர் தீர்மானித்துள்ளனர்.

## வங்கி ஊழியர் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், வியா.
வங்கி ஊழியராகக் கடமையாற்றி காலஞ்சென்ற திரு. கே. அற்புதநாதனின் சேவைக்காக இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையினர் அன்னாரது பெற்றோர்களான சுன்னாகம் மேற்கு கந்தரோடை வீதியைச் சேர்ந்த திருமதி கே. தவரத்தினத்திடம் ரூபா 6255 பெறுமதியான காசோலையை வழங்கினர்.

மேற்படி கிளையின் கமிட்டிக் கூட்டத்தில் தலைவர் திரு. எஸ். கதிர்காமநாதன் காரியதரிசி திரு. கே. என். திருஞானம் மற்றும் அங்கத்தவர்கள் சமுகத்தில் இந்த காசோலை கையளிக்கப்பட்டது. திரு. கதிர்காமநாதன் இதைக் கையளித்தார். இலங்கையிலுள்ள சகல வங்கி ஊழியர்களும் இதற்கு தலா ரூபா 2-50 வீதம் உத[illegible]

வலி கிழக்கு தமிழாசிரியர் சங்க

## புதுவருட வேலைத் திட்ட உபசபை விபரம்

உரும்பராய், புதன்
சமீபத்தில் நடைபெற்ற வலிகிழக்குத் தமிழாசிரியர் சங்க முதலாவது நிர்வாக மகாநாட்டில் கோப்பாய் வட்டார பாடசாலைகளின் நலனை உத்தேசித்து 1969ல் மூன்றாம், நான்காம் வகுப்புப் பரீட்சைகளை நடாத்துவதென ஏகமனதாக அபிப்பிராயம் நிலவியதை அடுத்து புதுவருட வேலைத்திட்ட அடிப்படையில் உபசபைகள் நியமிக்கப்பட்டன. உபசபைகளும் இயக்குநர் விபரங்களும் வருமாறு:

விளையாட்டுப் போட்டி சபை- இயக்குநர்: திருவாளர்கள் த. சுப்பிரமணியம், சி. கந்தசாமி, இ. துரைசிங்கம், த. மயில்வாகனம், ம. க. நடராசா.

சங்கீதமிழாச்சபை- இயக்குனர்: திருவாளர்கள் சி. கந்தசாமி, க. மார்க்கண்டு, பொ. இ.திருமேனி, அ. தம்பையா.

பேச்சுப்போட்டிச்சபை— இயக்குநர்: திருவாளர்கள் பொ. வேலும்மயிலும், செ. நடராசா, எஸ். வி. வேலுப்பிள்ளை, ம. க. நடராசா.

பரீட்சைச் சபை- இயக்குநர்: திருவாளர்கள் அ. பஞ்சாட்சரம், க. மார்க்கண்டு, இ. சிவசம்பு, ஜே. ஐ. தம்பிஐயா, எஸ். வி. வேலுப்பிள்ளை.

## ரூபா 18,900 நஷ்டஈடு

யாழ்ப்பாணம்,வியா.
பஸ்ஸினால் நெரியுண்டு இறந்த சாரதியின் குடும்பத்திற்கு 18, 900 ரூபா நஷ்டஈடு கொடுக்கப்பட்டது.

பஸ் விபத்தொன்றில் இ. போ. ச. பஸ்சாரதியான எஸ். இராசையா என்பவரின் குடும்பத்திற்கே இ. போ. ச. 18,900 ரூபா நஷ்டஈடாக கொடுத்துள்ளது. இறந்தவருக்காகஇலங்கைபஸ்தொழிலாளர்சமாசத்தின் ஆதரவில் வழக்கறிஞர் மு. ஆலாலசுந்தரம் ஆஜராகியிருந்தார்.
(வா.தி)


# குதிரை மார்க் வாளிகள்




குதிரை மார்க் கல்வனைஸ்ட் வாளிகளை வாங்கி உபயோகிக்கிறீர்களா?
இன்றே வாங்குங்கள்

குதிரை மார்க் வாளிகள் தரத்தில் உயர்ந்த இரும்புத் தகடுகளினால் செய்யப்பட்டவை. எங்கள் தொழிற்சாலையில் மட்டும் கல்வெனைஸ் முறைப்படி விசேஷமாகத் தயாரிக்கப்படுவன. உங்களுக்கு வேண்டிய எல்லாவித அளவுகளிலும் கிடைக்கும்

குதிரை மார்க் • HORSE BRAND •

தயாரிப்பாளர்கள்:-
தலைமைக்காரியாலயம்:- எல்பிஹெம்ஹவுஸ்
கொழும்பு.
தொழிற்சாலை:- எல்பிஹெம் ஹவுஸ்
மாவிட்டபுரம்.
வடமாகாண விநியோகஸ்தர்கள்:-
தனலக்குமி ஸ்ரோர்ஸ்
தெல்லிப்பழை.
ஏனைய பகுதிகளின் ஏகவிநியோகஸ்தர்:
லிங்கன் ட்ரேடர்ஸ்
சென். ஜோன்ஸ் வீதி, கொழும்பு11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலையற்ற பட்டதாரிகளிடம் ஜி. ஜி. கூறியது

யாழ்ப்பாணம், விசா.

"வேலையற்றிருக்கும் தமிழ் பட்டதாரிகளில் 117 பேர் சிங்களத்தில் தேர்ச்சி பெற்றிருப்பதாகவும், இவர்களில் 50 பேர் சிங்களத்தை ஒரு பாடமாக ஜி. சி. ஈ. பரீட்சையில் சித்தி பெற்றிருப்பதாகவும், ஒருவர் விஞ்ஞான பாடத்தில் சிங்களத்தில் சித்தி பெற்றிருப்பதாகவும், நான் பிரதமர் டட்லி சேனநாயக்காவிடம் விளக்கமாக எடுத்துக் கூறினேன். ஆனால் இவர்களில் ஒருவருக்காவது இன்னும் வேலை வழங்கப் படவில்லை"

யாழ்ப்பாணத்தில், வடபகுதி வேலையற்ற பட்டதாரிகள் சங்க அதுகோஷ்டியிடம் யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் நேற்று முன்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. சிவசுப்பிரமணியம், திரு. கனகரமேஸ்வரன் ஆகியோர் தலைமையில் சென்ற இத் அதுகோஷ்டி திரு. பொன்னம்பலத்திடம் தங்கள் நிலைமையை எடுத்துக் கூறியது.

இவ் வருடம் ஜனவரி மாதம் வடபகுதியுள்ள பாடசாலைகளிலிருந்து பல பட்டதாரிகள் தென்னிலங்கைக்கு இடமாற்றம் செய்யப்பட்டதால் இங்கு காலி இடமிருப்பதாக தான் கல்வி மந்திரியிடம் கூறியபோது, மேலதிகமாக இருந்த பட்டதாரி ஆசிரியர்களே வடபகுதியிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டதாக கல்வி மந்திரி கூறியதாகவும் திரு. பொன்னம்பலம் அதுகோஷ்டியிடம் தெரிவித்தார்.

தொகுதி வாரியாக அரசியல் ரீதியில் பட்டதாரிகளுக்கு வேலை வழங்கப்படும் முறையை நிறுத்த முயற்சி எடுக்கும்படி அது கோஷ்டி கேட்டுக் கொண்டது.

அரசியல் ரீதியாக நியமனம் வழங்குவதை ஆரம்ப முதல் தான் எதிர்த்து வந்ததாகவும், சமஷ்டிக் கட்சி எம். பி.க்களும் இதற்கு சம்மதித்தால், இம்முறையை நீக்கி, திறமைசாலிகளுக்கு இடமளிக்க முடியுமென்றும் இம்முறையை நீக்க சமஷ்டிக் கட்சியினர் சம்மதிக்க மாட்டார் என்றும் திரு. பொன்னம்பலம் தெரிவித்தார்.

தொகுதிகள் தோறும் கிளைகளை ஆரம்பித்து சங்கத்தை பலப்படுத்தினால் இலகுவாக பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியுமென்றும், திரு. பொன்னம்பலம் மேலும் தெரிவித்தார்.

# இந்து, இஸ்லாம் மாணவர் சார்பாக சுதந்திரக் கட்சி செனட்டர்

கொழும்பு, புதன்

'பௌத்தத்துக்கும் பாளிக்கும் கிறிஸ்தவத்துக்கும் விலக்களித்துவிட்டு இஸ்லாம், இந்து சமய பாடங்கள் எடுத்தவர்கள் மீது கைவைத்திருப்பது முறையற்றது' என்று நேற்று செனட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த செனட்டர் ஏ. ஆர். ஹமீம் கூறினார்.

ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சையில் நான்கு பாடங்கள் சித்தியடைந்திருந்தும் இஸ்லாம், இந்து சமய பாடங்களை நான்காவது பாடமாக சித்தி பெற்றவர்களுக்கு பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற்ற அறிவித்தல் கொடுக்கப்பட்டது தெரிந்ததே. இது சம்பந்தமாக செனட்டர் ஹமீம் நேற்று செனட்டில் உரை நிகழ்த்தினார்.

'அரசாங்கம் இது விஷயத்தில் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு தீர்மானத்தை மாற்றிக்கொள்ள வேண்டும்' என்று செனட்டர் ஹமீம் கேட்டுக்கொண்டார்.

## இருவரும் விடுதலை

யாழ்ப்பாணம், விசா

கரையூர் பெண் கடத்தல் வழக்கில் எதிரிகள் இருவரும் நேற்று பிற்பகல் விடுதலை செய்யப்பட்டனர். விசாரணையின் பின், யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் ஜனாப் மொகமட் ஜாமில் இரு எதிரிகளையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில் கரையூரைச் சேர்ந்த குணவதியை (14 வயது) கடத்திச் சென்றதாக தேவசகாயம், டேவிட் ஆகியோர் மீது குற்றஞ் சாட்டி கரையூர் பொலிசார் வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.

எதிரிகள் சார்பில் அட்வகேட் எம். எஸ். சுந்தரலிங்கம், புறக்டர் பி. கதிரவேலுவின் அனுசரணையுடன் ஆஜரானார். வழக்காளி தரப்பில் புறக்டர் ஜிம்மி ராஜரத்தின பொலிஸாரின் உதவியுடன் ஆஜரானார்.

## சுன்னாகம் சந்தையில்

# முருங்கைக்காய் வாங்கினார் சுகாதார அமைச்சர்!

(காரியாலய நிருபர்)

சுன்னாகச் சந்தைக்குத் திடீரெனச் சென்ற சுகாதார அமைச்சர் அங்கு ஒரு கட்டு முருங்கைக்காய் வாங்கினார். எந்தவிதமான பொலிஸ் பாதுகாப்புமில்லாமல் தனது உதவிக் காரியதரிசி திரு. எம். வீரசிங்கத்துடன் மட்டுமே இவர் சுன்னாகம் சந்தைக்குள் சென்று நேற்று காலை முருங்கைக்காய்களை வாங்கினார்!

தனது வடபகுதி விஜயத்தின் நினைவாக முருங்கைக்காய்களை அமைச்சர் தன்னுடன் கொண்டுசென்றார்.

அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்க நேற்று காலை விசேஷ விமான மூலம் கொழும்பு திரும்பினார். (கா. நி.)

## கம்பஹா எம். பியின் எச்சரிக்கை

கொழும்பு, புதன்

'ஏழை விவசாயிகள் மீது உங்கள் அதிகாரத்தைக் காட்டி அவர்களைத் தவிக்க வைக்காதீர்கள்' என்று அரசாங்கத்தை எச்சரித்திருக்கிறார், கம்பஹா எம். பி.யும், கம்யூனிஸ்ட் [சீனசார்பு] கட்சியைச் சேர்ந்தவருமான திரு. எஸ். டி. பண்டாரநாயகா.

'பெற்றுக்கொண்ட விவசாயக் கடன்களை உரிய தவணையில் கட்டாததற்காக விவசாயிகளின் கூப்பன்களைப் பறிமுதல் செய்வது அநீதியாகும். கட்டுவதற்கு வழியில்லாததாலேயே அவர்கள் உரிய தவணையில் கட்டவில்லை. அவர்களது கூப்பன்களை பறிமுதல் செய்யாமல், கடன்களை கட்டுவதற்கு தவணை கொடுப்பதே அரசாங்கம் செய்யவேண்டிய செயலாகும். இதுவே நீதியாகும்' என்று திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

## 12ல் ஒரு பகுதி வாலிபரே தெரிவு

யாழ்ப்பாணம், விசா.

1200 வாலிபர்களில் சுமார் 100 பேரே பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கான முதலாவது தேர்வில் தெரிவு செய்யப்பட்டனர்.

வடபகுதியில் நடைபெற்ற இத்தேர்விலேயே இந்த 100 பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இம்மாதம் 15-ம் திகதி ஆரம்பமாகி இன்று முடிவடைந்த இத் தேர்வில் சுமார் 275 பேர் மட்டும் உயரம், மார்பளவு போன்றவைகள் சரியாகக் காணப்பட்டவர்களாக இருந்தார் என உயர்தர பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (கா. நி)

## மின்சார உபகரணங்கள் களவு போயிற்று?

யாழ்ப்பாணம், விசா.

தங்கள் வீட்டு மின்சார உபகரணங்கள் ஏதாவது களவு போய் விட்டனவா? அப்படியானால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பகுதியினருடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

களவாடப் பட்டதாகச் சந்தேகிக்கப்படும் மின்சார பல்புகளுடனும், வயர்களுடனும் ஒருவரை யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்றுக் கைது செய்ததே இதற்குக் காரணமாகும். அம்பலாங்கொடையைச் சேர்ந்த இந்தச் சந்தேக நபர் இப்போது பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார். (கா.நி.)

## இரண்டு வயது ...

1-ம் பக்கத் தொடர்ச்சி

டிக்கோயா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு காலமானார்.

இது சம்பந்தமாக இத் தோட்டத்தைச் சேர்ந்த 31 பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# 'சிறந்த பண்பாளராக்குவதும் ஆசிரியர்களது கடமை'

## சிறுவர் தினவிழாவில் பேச்சு

அளவெட்டி, புதன்

"மாணவ, மாணவிகளுக்கு உயர்தரக்கல்வி போதித்தால் மட்டும் போதாது. அவர்களை ஆசிரியர்கள் சிறந்த பண்பாளர்களாக்கினால் தான் அவர்கள் சிறந்த மாணவர்களாகத் திகழ்வார்கள்"

இவ்வாறு இளவாலையில் நடைபெற்ற சிறுவர்தின விழா பரிசளிப்பு விழாவில் பேசுகையில் ஐக்கிய நாடுகள் சங்க இலங்கைத் தலைவர் திரு. ஸ்ரீ பத்மநாதன் கூறினார்.

உலகெங்கும் கொண்டாடப்பட்டுவரும் சிறுவர் தினத்தை யொட்டி மல்லாகம் நீதிமன்ற எல்லைக்குள்ள பாடசாலைகளுக்கிடையே ஓர் இயல், இசை நாடகப்போட்டி நடத்தப்பட்டது.

இப்போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசளிப்பு வைபவம் நேற்று நீதிபதி எம். சண்முகலிங்கம் தலைமையில் இளவாலை றோமன்கத்தோலிக்க பாடசாலையில் நடைபெற்றது.

இவ் வைபவத்தில் திரு. பத்மநாதன் மேலும் பேசுகையில், 'சிறுவர்கள் திடகாத்திரமாக வாழ தேவையானது விளையாட்டும் விவசாயமுமே. ஆகவே இத்துறைகளில் உங்கள் பிள்ளைகளை ஈடுபடுத்தி இலங்கை வளர்ச்சியை பெருக்க பெற்றோர்கள் முன்வரவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

மல்லாகம் நீதிபதி எம். சண்முகலிங்கம் தமது தலைமையுரையில் நாம் அரசாங்கத்தை நம்பியிராது எம். [illegible] சந்ததியினராகிய சிறுவர்களை விவசாயம் போன்ற துறைகளில் ஈடுபடுத்தினால்தான் எமது நாடு தன்னிறைவு காணும் என்று கூறினார்.

இயல், இசை, நாடகம் போன்ற போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு திருமதி சண்முகலிங்கம் பரிசில்கள் வழங்கினார்.

அடுத்து நடைபெற்ற கலைவிழாவில் அளவெட்டி, அருணோதயக் கல்லூரி, இளவாலை கொன்வென்ற் பாடசாலை, நல்லூர் நாட்டியாலயம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆகியனவும் கலந்து கொண்டன.

இறுதியில் குற்றத்தடுப்பு பகுதி அதிகாரி திரு. பொ. சண்முகராசா நன்றியுரை கூறினார்.

பாவம், மந்திரி ஈசிய கொக்கிக்கு இன்னுமொரு தலைவலி!

## மாமியார் வீட்டில் பரிதாப முடிவு

யாழ்ப்பாணம், விசா.

தென்னை மரத்தில் தேங்காய் பிடுங்க ஏறிய வாலிபர் ஒருவர் சறுக்கி விழுந்து ஸ்தலத்திலேயே மரணமானார்.

மானிப்பாய் பகுதியில் நடைபெற்ற இச்சம்பவத்தில் சிமோன் அல்போன்சஸ் என்ற (29 வயது) வாலிபரே மரணமானவராவார்.

இது சம்பந்தமாகத் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினார்.

மரணமானவர் 6 மாதங்களுக்கு முன்னரே திருமணமானவரென்றும், மாமியார் வீட்டு தென்னைமரத்தில் இவர் தேங்காய் பிடுங்க ஏறியபோது சறுக்கி விழுந்து மரணமானதாகவும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது. பிரேத பரிசோதனையின் பின்னர் விபத்து மரணம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. (கா.நி.)

## ஒரு திருத்தம்

'சிறைச்சாலை இளைஞருக்கு என்ன செய்யும்' என்ற தலைப்புடன் 15-10-68 'ஈழநாடு' 8-ம் பக்கத்தில் வெளியான செய்தியில் புத்தூரைச்சேர்ந்த காசியர் பொன்னுத்துரை என்றிருப்பது தவறு. காசியர் சரவணமுத்து என்றிருக்க வேண்டும். தவறுக்கு வருந்துகிறோம்.

## 13 வட்டார...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

னத்துரை, 9-ம் வட்டாரம் திரு. க. முருகேசபிள்ளை, 10-ம் வட்டாரம் திரு. நா. இராசசுந்தரம், 11-ம் வட்டாரம் திரு. க. நடராசா, 12-ம் வட்டாரம் திரு. சி. ஐயாத்துரை, 13-ம் வட்டாரம் திரு. வி. சுப்பிரமணியம், ஜே. பி.

## கோபம் செய்த வேலை?

சுழிபுரம், புதன்

தீபாவளித் தினத்தன்று கோபங்கொண்ட ஒருவர் தனது உறவினரின் வளவுக்குட்போய் கத்தியால் வெட்டித்தள்ளினாராம் அங்கிருந்த வேலியை. இதனால் பெரிய நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக சங்கானைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

சித்தங்கேணி பெற்றோல் நிலையத்துக்கருகில் இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது. வேலியில் நாட்டப்பட்டிருந்த பெரிய கம்பங்கள் வீதியில் விழுந்து போக்குவரத்துக்கும் இடைஞ்சல் ஏற்பட்டதாம்.

## பன்னாலை சசவிழா

அளவெட்டி, செவ்வாய்

தெல்லிப்பழை பன்னாலை கணேசா சனசமூக நிலைய 17-வது ஆண்டுவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கணேசா சனசமூக நிலைய 17-வது ஆண்டு விழாவும், திரு. ம. சிதம்பரநாதன் தெல்லிப்பழைக் கிராம சபைக்கு தலைவராக தெரிவு செய்யப்பட்டமைக்கு வரவேற்புவிழாவும் பன்னாலை சேர் கனகசபை அமெரிக்கன் தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் நிலையத் தலைவர் திரு. வே. கந்தையா தலைமையில் நடைபெற்றன.

## ஓலை எடுத்தவர் மாண்டார்

புலோலி, புதன்

மின்சாரக் கம்பத்தின் மேலிருந்த காவோலையை எடுத்தவர் துடிதுடித்து மாண்டார். இச்சம்பவம் தீபாவளியன்று புலோலியிலுள்ள பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பிரதான வீதியில் நடந்தது.

# தீர்ப்புக்கெதிராக சுந்தரலிங்கம் அப்பீல்

அளவெட்டி, புதன்

மாவை ஆலயப்பிரவேச வழக்கு தீர்ப்புக்கெதிராக அப்பீல் மனுவொன்றை தாக்கல்செய்துள்ளார் எதிரி.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஆலயப் பிரவேச [illegible] வழக்கு எதிரியான முன்னாள் [illegible] எம். பி. திரு. ஸி. சுந்தரலிங்கத்துக்கு 50 ரூபா அபராதம் விதித்தது தெரிந்ததே.

இத்தீர்ப்பை எதிர்த்து எதிரி ஓர் அப்பீல் மனுவை மல்லாகம் நீதிமன்றத்தில் மாஜிஸ்திரேட் எம். சண்முகலிங்கம் முன்னிலையில் தாக்கல் செய்தார். இக் கோவில் ஆலயப்பிரவேசம் சம்பந்தமான மற்றும் 2 வழக்குகளும் நவம்பர் 10-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org